(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.83/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.1 (LW.1 )

| | | |
|---|---|---|
| Name | : | பெருமாள் |
| Father's/Husband Name | : | சின்னண்ணன் |
| Village | : | திருச்செங்கோடு |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | டிரைவர் (வயது முதிர்வின் காரணமாக வீட்டில் இருந்து வருகிறேன்) |
| Age | : | 67 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **15.06.2026.**

**முதல் விசாரணை:-**

1) ஆஜர் எதிரி எனது மாமியார் குஞ்சாய் (எ) காளியம்மாள் என்பவரின் தம்பி மருமகள் ஆவார். எனது மாமியாரும் அவரது அண்ணனும் அவர்களுக்கு சொந்தமான சொத்தை பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள். எனது மாமியாருக்கு எனது சின்ன மாமியார் திருமதி.செல்வத்திற்கும் 2 ஏக்கர் 40 செண்ட் பாகப்பிரிவினையாக பெற்றுக்கொண்டார்கள். மேற்படி சொத்தை இருவரும் அனுபவம் செய்துகொண்டிருக்கும்போது அவரது தம்பி சண்முகம் என்பவர் அவர்களுக்கு சொந்தமான சொத்தை அவர் மற்றவர்களுக்கு விற்றதாக நான் தெரிந்துகொண்டோம். இது சம்பந்தமாக எனது மாமியார் மற்றும் சின்ன மாமியாரும் திருச்செங்கோடு சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

பின்னர் பாகப்பிரிவினை ஆன சொத்துக்களை அவர்கள் இருவரும் பாகக்கிரார் செய்துகொண்டனர். அவர்களுடைய சொத்தை வாங்கிய நபர்கள் எனது மாமியார் மற்றும் சின்னமாமியார் மீது வழக்கு தொடர்ந்தார்கள். தற்போதும் அந்த வழக்கு நிலுவையில் இருந்துவருகிறது. பாக்கிரார் செய்துகொண்டது தொடர்பாக சொத்து வாங்கிய நபர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அது நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

பின்னிட்டு எனது மாமியார் இறந்துவிட்டார். பின்னர் எனது மாமியார் சொத்துக்களை நானும் எனது மச்சினரும் பார்த்துக்கொண்டுவருகிறோம். எனது சின்ன மாமியார் எனது பெயருக்கும் எனது மச்சினன் செல்வம் பெயருக்கும் 6 செண்ட் நிலத்தை கிரயம் செய்துகொடுத்தார். மேற்படி இடத்தை நானும், புரோக்கர் சித்தேஸ்வரனும் எனது இடத்தையும் எனது மாமியாருக்கு சொந்தமான இடத்தையும் பார்ப்பதற்காக 07.06.2022–ம் தேதி சுமார் மாலை 5.00 மணியளவில் நாங்கள் சென்றோம். நான் என்னுடன் வந்த புரோக்கருக்கு இடத்தை காட்டிக்கொண்டிருந்தேன். அவருடன் இரண்டு நபர்கள் வந்திருந்தனர். அப்போது ஆஜர் எதிரி அங்கே வந்தார். அவர் என்னை பார்த்து இந்த இடம் எனக்கு சொந்தமானது என்றும் நீங்கள் எப்படி விற்கலாம் என்று கூறி கீழே இருந்த கல்லை எடுத்து எனது வலதுகால் முட்டியில் அடித்தார். பின்னர் நான் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டபோது அவர் மீண்டும் கையில் இருந்த கல்லைக்கொண்டு எனது வலது கை மணிக்கட்டில் அடித்தார். பின்னர் அருகில் இருந்தவர்கள் வந்தவுடன் அவர் தகாத வார்த்தைகளால் திட்டி கல்லைக்காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விட்டுவிட்டு கல்லை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். பின்னர் என்னுடன் வந்த புரோக்கர் சித்தேஸ்வரன் என்னை திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்.

நான் சிகிச்சையில் இருந்தபோது மறுநாள் போலீசார் அங்கு வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த

புகார்வாக்குமூலம் **அ.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:–

எனது சொந்த ஊர் சேலம் என்றால் சரியல்ல. எனது சொந்த ஊர் திருச்செங்கோடு ஆகும். ஆனால் நாங்கள் சேலத்தில் வசித்துவருகிறோம். நான் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுக்கும்போது எனது சொந்த ஊர் சேலம் என தெரிவித்திருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் ஆதார் கார்டு, முகவரி திருச்செங்கோடில் தான் உள்ளது. நிலம் சம்பந்தமான பிரச்சனை எனது மாமியாருக்கும் அவருடைய தம்பிக்கும் எவ்வளவு ஆண்டுகாலமாக இருந்துவருகிறது என்றால் சுமார் 50 ஆண்டுகாலமாக இருந்துவருகிறது. நான் சொன்ன பிரச்சனைக்குரிய இடம் 2005–ம் வருடத்திற்கு முன்பாகவே விற்பனை செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த இடத்தை விலைக்கு வாங்கிய செந்தில்குமார் மற்றும் மணி ஆகியோர் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. மணி என்பவர் அந்த இடத்தில் கொட்டாய் போட்டு தென்னை மரங்கள் வைத்து வளர்த்துவருகிறார் என்றால் சரிதான். ஆனால் மணி என்பவருக்கு நாங்கள் தான் அந்த இடத்தை பராமரிப்பு செய்வதற்காக கொடுத்துள்ளோம். மணி என்பவர் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்றால் அவரது முகவரி தெரியுமா என்றால் அவர் சாணார்பாளையம் பண்ணைக்காட்டில் வசித்துவருகிறார். சாணார்பாளையம் பண்ணைக்காடு என்பது தான் சம்பவ இடம் என்றால் சரிதான். மணி என்பவர் அந்த இடத்தை விலைக்கு வாங்கி பயன்படுத்தி வருகிறார் என்றாலும் எனக்கும் அந்த இடத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு அந்த இடமே சொந்தம் இல்லை என்ற நிலையில் நான் அந்த இடத்தை விற்பதற்காக புரோக்கரை அழைத்துக்கொண்டு அங்கு சென்றதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

மணி என்பவரை சாட்சியம் அளிக்க அழைத்தால் அவர் பயன்படுத்தி வரும் என்னுடைய இடம் என்று கூறுவாரா என்றால் அவர் அவ்வாறு சொல்லுவாரா

என்று எனக்கு தெரியாது. அவருடைய மனநிலை என்னவென்று எனக்கு தெரியாது. நான் மணி என்பவருக்கு பராமரிப்பு செய்ய எனது இடத்தை கொடுத்தேன் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. அந்த இடமே எனக்கு சொந்தமானது இல்லை என்றால் சரியல்ல. எனது மாமியார் மற்றும் எனது சின்ன மாமியார் செல்வம் இருவருமே சண்முகம் என்பவர் மீது தாக்கல்செய்துள்ள அனைத்து வழக்குகளும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்கள்.56/2006 முதல் 60/2006 வரையிலான அனைத்து வழக்குகளும் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தால் ஏற்கனவே தள்ளுபடியாகிவிட்டது என்றால் அந்த வழக்குகள் சமரசம் மூலம் தீர்த்துக்கொள்ள மனுதாக்கல்செய்யப்பட்டது. அதன்படி அந்த இடங்களை சண்முகம் என்பவரிடம் விலைக்கு வாங்கிய நபர்கள் எங்களிடம் சமரசம் பேசி எங்களுக்கு தொகை கொடுத்து சமரசம் செய்துகொண்டார்கள். அதன்படி தள்ளுபடி செய்யப்பட்டது.

அதனால் பிரச்சனைக்குரிய இடத்தில் எனது மாமியாருக்கு உரிமை உள்ளதாகவும், எனது சின்ன மாமியாருக்கு உரிமை உள்ளதாகவும், எனக்கு உரிமை உள்ளதாகவும் கூறுவது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. எனது மாமியாரின் தம்பி சண்முகம் என்பவர் குடியிருக்கும் வீட்டை கட்டி எவ்வளவு ஆண்டுகள் இருக்கும் என்றால் 2011 2012 வருடத்தில் கட்டினார். அப்போது எனது மாமியார் அவரது தம்பி சண்முகம் பாகத்தில் வசித்துவந்தார். எதிரி தீபாவை மேற்படி சண்முகத்தின் மகன் 2010-ம் ஆண்டு திருமணம் செய்தார் என்றால் சரிதான். திருமணம் ஆன நாள் முதல் தற்போது வரை அவர் அந்த வீட்டில் தான் வசித்துவருகிறார் என்றால் சரிதான். அந்த வீட்டில் எனக்கு பாகம் இருக்கிறது என்று கூறி நான் 5 மற்றும் 10 நபர்களை அழைத்துச்சென்று அடிக்கடி இரவு நேரத்தில் தகராறு செய்துவருவேன் என்றால் சரியல்ல. அதன்காரணமாக என்மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்றால் சரியல்ல. 2021-ம் ஆண்டு நான் அதேபோல் தகராறு செய்து CCTV பதிவானதை கொண்டு என் மீது புகார் கொடுக்கப்பட்டு CSR பதிவுசெய்யப்பட்டது என்றால்

சரியல்ல. அவ்வாறு CSR பதிவுசெய்யப்பட்டதற்கு நடந்த விசாரணையில் நான் இனிமேல் அவ்வாறு தகராறு செய்யமாட்டேன் என்று மன்னிப்பு கடிதம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. அந்த புகாரில் எனக்காக யார் கடிதம் எழுதிக்கொடுத்தார்கள் என்று சொன்னால் நான் எழுதிக்கொடுக்கவில்லை.

சம்பவம் 07.06.2022-ம் தேதி மாலை 5.00 மணிக்கு நடந்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் அப்போது சுயநினைவுடன் இருந்தேன் என்றால் ஆமாம், சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு 5 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். நான் உடனடியாக சம்பவத்தன்று புகார் அளிக்காததற்கு என்ன காரணம் என்றால் மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாலும் எனக்கு கால்வலி அதிகமாக இருந்ததாலும் நான் சம்பவத்தன்று புகார் கொடுக்கவில்லை. நான் மருத்துவரிடம் சம்பவம் குறித்து என்ன கூறினேன் என்று ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. என்னை மருத்துவமனைக்கு யார் அழைத்துவந்தார்கள் என்றால் சித்தேஸ்வரன் என்பவர் அழைத்துவந்தார். என்னிடம் காவல் துறையினர் அன்றையதினமே விசாரித்தார்களா என்றால் புகார் கொடுத்த மறுநாள் விசாரித்தார்கள். நான் சொன்ன தேதியில் எதிரி திருச்செங்கோடு ஊரிலேயே இல்லை என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமான இடமே இல்லாதபோது எதிரி அத்துமீறி வந்ததாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் பெயரில் அந்த இடம் கிரயம் ஆகியுள்ளது. எதிரி திருச்செங்கோட்டிலேயே இல்லை என்னை எதிரி கெட்டவார்த்தையால் திட்டியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. என்னை எதிரி தாக்கியதாகவும் எனக்கு கொலைமிரட்டல் விடுத்ததாகவும் கூறி பொய்யான புகாரை அளித்து எதிரியின் சொத்தை அபகரிக்க நினைக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி குடும்பத்தினர் அவர்களது சொத்தை எல்லாம் விற்றுவிட்டார்கள். அவர்களுக்கு எந்த சொத்தும் இல்லை. அவர்களுக்கு சொத்தே இல்லை என்பதால் மூன்றாம் நபர்களுக்காக என்னிடம் வந்து எதிரி தகராறு செய்ய வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை என்றால் சரியல்ல. எதிரியின்

கணவர் பிரபலமான வங்கியில் மேலாளராக உள்ளார் என்றால் அவர் வங்கியில் வேலை செய்கிறார் ஆனால் அவர் பதவி குறித்து எனக்கு தெரியாது. எதிரிக்கு என்னுடன் வந்து தகராறு செய்யவேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரி குடியிருக்கும் இடத்தில் வந்து அவர்களிடம் அடிக்கடி இடம் கேட்டு தகராறு செய்துவருவது தான் பிரச்சனை என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் வேலைக்கு சென்றபிறகு தனியாக இருக்கும் எதிரியிடம் நான் ஆட்களை அழைத்துச்சென்று தகராறு செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் சேலத்தில் குடியிருந்துகொண்டு தகராறு செய்வதற்காக மட்டும் ஆட்களை அழைத்துவருகிறேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் கற்பணையான ஒரு புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:– இல்லை

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.15 19:02:09 +0530